
ஜென்
கதைகள்
N.நடராஜன்

நூல் விவரம்

நூலின் தலைப்பு

ஜென் கதைகள்.

ஆசிரியர்: நடராஜன் நாகரெத்தினம்

முதற் பதிப்பு: ஜூன் 2000 (Print)

மின் புத்தக வடிவம்

(மெருகேற்றப்பட்டது) செப்டம்பர் 2013

பதிப்பசிரியர்: நடராஜன் நாகரெத்தினம்.

தொடர்பு: natarajan.naga@gmail.com

# பொருளடக்கம்

01. விவேகம் உள்ள ஒரு விவசாயி

02. இது ஒரு பூனைக்கதை.

03. ஒற்றை பிராமணன் எதிரே வந்தால், அது ஒரு அபசகுனம்.

04. சாதுவைத் தேடி

05. மத நல்லிணக்கம்

06. பைபிளும் ஜென் ஆசிரியரும்

07. ஏசுவும் தீர்க்கதரிசியாரும்

08. பொதுவான ஒரு எச்சரிக்கை

09. விருப்பம் நிறைவேற (என்ன செய்யவேண்டும்?)

10. கடவுளைக்காண விரும்பியவன்

11. திடுக்கிட

12. விதியை வென்ற மதி

13. வித்தியாசமான சாதுக்கள்.

14. டீ டீச்சர்

15. மாணவரே இல்லாத ஆசிரியர்

16. மூன்று பதிப்புகள்

17. ஆபத்தான சில செயல்பாடுகள்

18. சுவர்க்கமும் நரகமும்

19. பேசாமல் இருப்பது எப்படி?

20. நியமனம்

21. தலைமைப் பதவி

22. ஜென்னும் தீவிர கவனமும்

23. எரித்த புத்தகங்கள்

24. ஒரு கண்

25. இரண்டு முயல்கள்

26. வழியும் கோப்பை

27. எலி பிடித்த மாணவன்

28. கொடியவருக்கும், நல்லவர் நல்லவரே.

29. பாலைவனத்தில் இரு மனிதர்கள்

30. உபயோகமில்லா தந்தை.

31. வில்லாளியும் ஜென் மாஸ்டரும்

32. குருமார்களின் இலக்குகள்

33. ஞான ஒளி

34. சுமை தாங்கிகள்.

35. சுமை தாங்கிகள்.

36. இரு நண்பர்கள்

37. உறக்கம்

38. குடித்தது தண்ணீர்

39. வெற்றி கொள்ள

40. பரிசு.

41. நிதானம்

42. புதுமையான வாழ்த்து

43. செத்தால் தான் தெரியும்

44. ஏன் பதில் சொல்ல முடியாது?

45. அகங்காரம்

46. பகல் கனா

# முன்னுரை

எனது ஜென் கதைகள் புத்தகத்தின் முதன் பதிப்பு வெளிவந்து சுமார் 10 வருடங்களைக் கடந்திருக்கும்.

இன்றைய உலகம், இந்த இடைக்காலத்தில், மிகவும் மாறிவிட்டது. அதிகரித்த மக்கள் தொகை. வளமான வாழ்க்கைக்குத் தேவையான அதிகரித்த வாய்புகள். அதோடு வாழ்வின் வேகமும் பல மடங்கு அதிகரித்துள்ளது. ஒரு விதத்தில் நாமும் நமது நாடும் வளர்கிறது என்று மகிழலாம்.

ஆனால் அதிகரித்த எதுவும் தன்னோடு ஆபத்தையும் அழிவையும் கொண்டு வருவது இயற்கைதானே?

வாழ்வின் வேகம் நம் அனைவரையும் வெவ்வேறு அளவுகளில் பாதித்திருப்பதில் வியப்பு எதுவும் இல்லை.

முக்கியமாக அதிகப்படியான மக்கள் பல புதுவகை நோய்களால் அவதியுருகிறார்கள். புதிய குற்றங்கள் நிகழ்கின்றன. பழைய குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. ஏழைகள் அதிக ஏழ்மையைத் தழுவுகிறார்கள்.

மதங்கள் பிறந்தன:

அதையெல்லாம் இயற்கையின் நிகழ்வுகள். போகட்டும். அறிவியல் முன்னேற்றம் மனிதர்களை படிப்படியாக பின்னோக்கி தள்ளுகிறதே! பொருள் வேட்டையில் மனிதத் தன்மையை அல்லவா இழந்து வருகிறார்கள்.

மனிதரிடையே மனிதத் தன்மையை வளர்த்து, அவற்றை நிலை நிறுத்த மகான்கள் தோன்றி மதங்களைத் தோற்றுவித்தார்கள். அவர்களில் யாருமே, நம்மை போல குறுகிய மனம் கொண்டவரில்லை. இவர்கள் அனைவருமே மாமனிதர்கள். இறைவனின் தூதுவராக மக்கள் அவர்களைக் கண்டார்கள். அதில் அதிசயம் ஒன்றும் இல்லை.

தன்னலம் எதுவும் இல்லாமல், நம் போன்ற மூடர்களுக்கு நல்லதொரு வாழ்வு அமைத்துத் தர உழைத்தவர்கள். அறிவில் மிக உயர்ந்தவரான இவர்களை, ஞானிகள் என்று அழைத்தால் அது மிகவும் குறைவு.

## தடம் புரண்ட மதங்கள்:

இன்றோ, அதே மதங்கள், மனிதர்கள் ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ள ஒரு கருவியாக மாறியிருக்கிறது. எந்த ஒரு மதமும் மனிதர்களிடையே நட்பையும் நல்லுறவையும் ஏற்படுத்தாவிட்டால் அப்படிப்பட்ட மதங்கள் காலாவதியாகி விட்டதாகக் கொள்ளலாம் இல்லையா?

காலியான பெருங்காயப் டப்பியில் எஞ்சியிருப்பது என்ன? பெருங்காய வாசனை மட்டும்தானே? இன்று மதங்களில் எஞ்சியது என்ன? மதச் சின்னங்கள், விதவிதமான விழாக்கள், கொண்டாடங்கள் மற்றும் ஆலயங்கள். ஒருவர் இன்ன மதத்தை சாந்தவர் என்று குறிக்கும் பெயர்களும் உண்டு. இல்லாதது, மதத்தை அமைத்துத் தந்த மகான்கள் செய்த போதனைகள். என்றோ அவர்கள் அமைத்துத் தந்த வாழ்கைப் பாதை இன்று, காண்ட்ராக்டர் போட்ட சாலை போல, குண்டும் குழியுமாக உள்ளது.

மதங்களில் பெயரில் எத்தனை அழிவுகள்? எத்தனை கொலைகள் மற்றும் கொள்ளைகள்? வரலாற்றின் பக்கங்களில் மதத்தின் பெயரில் மக்கள் அடைந்த துன்பங்கள்தன் அதிகம்.

வாசகர்கள் ஒப்புக் கொண்டாலும் மறுத்துவிட்டாலும், நாமெல்லாம், சிந்திக்கும் ஆற்றல் குறைந்தவர்கள். அதனால் பெறும் அறிவிலும் மிகக் குறைந்தவர்கள.¢

நமது வாழ்க்கை நடந்தேறுவது பெரும்பாலும் நம்பிக்கையின் அடிப்படையிலேதான். ஒவ்வொரு காலகட்டத்திலும் சில சுயனலமிக்க மனிதர்கள் மக்களின் நம்பிக்கையை முதலீடாக வைத்து மக்களை அழிவுப்பாதையில் வழி நடத்துவது தொடர்கிறது.

இன்றும் என்றும், நல்ல மதத் தலைவர்கள் எவருமே, மற்ற மதங்களின் மீது காழ்ப்போ அல்லது தாழ்வான எண்ணங்களைக் கொள்வதும் இல்லை. மற்ற மதங்களில் நம்பிக்கை கொண்ட மக்களை துன்புருத்தத் தூண்டுவதில்லை.

## மதங்களும் சிந்தனையும்:

பொதுவாக மதங்களில் யாரும் கேள்விகள் எழுப்புவதில்லை. அதற்கு பதில்கள் எவரும் சொல்வதில்லை. (அதிகம் சிந்திக்க இயலாத பெரும் பகுதி மக்களான நமக்கு மதங்கள் காட்டும் வழிகள் மிகவும் அதிகமாகன பலன் தரும்).

புத்த மதத்தின் ஒரு பிரிவான ஜென் புத்திசம் (பௌத்த மதம்), இதற்கு ஒரு விதிவிலக்கு. மனிதனை சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது மத விளக்கங்களும், அறிவுரை மற்றும் கதைகள்.

கதைகளைப் படிக்கும்போது வாழ்க்கையில் நாம் அறிந்திராத பல கோணங்கள் தெரியவரும்.

ஒரு மதத் தலைவர் மக்களை நல்ல வழியில் நடத்திச் செல்கிறார்களா, இல்லையா என்று அறிவது எப்படி? எந்த ஒரு மதத்தைப் பற்றியும் மற்ற மதத் தலைவர்கள் என்ன சொல்கிறார்கள்? மதத் தலைவர்கள் மக்கள் நல்வாழ்வுக்கு எப்படியெல்லாம் உதவுகிறார்கள்? உண்மையான மதத்தலைவர்களின் தன்மை என்னவாயிருக்கும்? இதை வைத்து நாம் நாம் சுலபமாக அறிந்து கொள்ளலாம். இவற்றை இங்கே படிக்கலாம்.

இந்தப் புத்தகம் கதைகள் நிரம்பியது. இந்தக் கதைகளைப் படித்தால் மட்டும் போதாது. அவற்றை அலசி, சிந்தித்து, அதில் புதைந்துள்ள அறிவை தேடி எடுத்து, மனதில் இருத்தி, தினசரி வாழ்வுக்கு பயன்படுத்துவது மிகவும் அவசியம்.

நடராஜன் நாகரெத்தினம்

# ஜென் என்றால் என்ன?



ஒரு ஊரின்¢ பெயரோ அல்லது பொருளின் பெயர்களோ காலத்தின் வேகமான ஓட்டத்தில் வலுவிழந்து சிதறி, உருமாறுவது என்றும் புதியது இல்லை

சென்னையில் ஒரு பாலத்தின் பெயரை உதாரணமாகக் கொள்ளலாம்.

ஹாமில்டன் பிரிட்ஜ் என்று ஒரு பாலம். இந்தப் பெயரை பாலம் கட்டிய காலத்தில் பாலத்திற்கு (கட்டியவர் பெயரை ?) வைத்தார்கள்.

இந்தப் பெயர், சில தவறான வாய்களில் புகுந்ததால், உருமாறி அம்பட்டன் பிரிட்ஜாக மாறியது. அதுவே காலப் போக்கில் அம்பட்ட- வாராவதி என்று முழுவதுமாக மாறியது.

அடுத்து வந்த மக்கள், மீண்டும் அதற்கு ஒரு ஆங்கிலப் பெயர் தந்து பார்பர்ஸ் பிரிட்ஜ் என்று மாற்றி விட்டாதாகக் கேள்வி. ஹாமில்டன் என்ற பொரியியல் நிபுணரை மக்கள் ஒரு சிகை திருத்துவராக மாற்றிய கொடுமை.

ஜென் என்ற ஒரு இயக்கம் தோன்றி, ஆயிரத்திற்கும் அதிகமான வருடங்கள் ஓடியிருக்க வேண்டும். இன்று இதன் முதற் பெயரை அறிய வாய்ப்பில்லை. ஆனால் அதற்கு பல விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. கிலவற்றைப் பார்ப்போம்.

ஆன்மிகத்தின் தேர்ந்தவர் சொல்வார்கள், அண்டத்தில் உயிர் இல்லாதது எதுசும் இல்லை. உயிருள்ள எல்லாமே ஓடும் தன்மையை உடையது. ஆனால் ஓடும் விதம்தான் மாறுபடும்.

மதங்களும், மற்ற உயிர்களைப் போலவே, இடம் பெயருகின்றன. புதியதாக தோன்றிய மதங்கள் பழைய அல்லது வேற்று கலாசாரத்தில் கலக்கும் போது உருமாறுகின்றன.

பல நாடுகளில், பல விதங்களில், புத்த மதத்தைத் தழுவிய மக்கள் வாழ்கிறர்கள். அவர்கள் எல்லோருமே ஆங்காங்கே தாங்கள் பின்பற்றும் சடங்குகள், வழிபாடுகள் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில், மற்றவரிடம் இருந்து அதிக அளவில் மாறுபட்டிருப்பார்கள்.

ஜென் என்னும் பெயர், சீனாவில் ஜியாங் மானிலத்தில், அக்கால அரசர்களால் வரவேற்கப்பட்டு, மக்களால் பின்பற்றப்பட்ட புத்தமதத்தின் ஒரு வடிவம். ஜியாங், ஜென்னாக உருமாறியிருக்கலாம் என்பது சிலரின் ஊகம்.

வட மொழியில் க்யான் (Gyaan) என்ற சொல் அறிவைக் குறிக்கும். இதுவே, ஜென் என்ற சொல்லாக உருமாறியதாகச் சொல்லும் மக்களும் உண்டு. புத்த மதம் அறிவு அல்லது சிந்தனையின் அடிப்படையில் உருவானது.

புத்தர் அவரையோ அல்லது எந்தக் கடவுளையோ வழிபட சொன்னதாக எனக்குத் தெரியாது. ஆனால், அவரால் பயனடைய அவர் தந்த எட்டு உண்மைகளை அறிவால் தேடி, தினசரி வாழ்க்கையில் இணைத்தால் மாத்திரமே பின்பற்றும் மக்களுக்கு முழுப் பயனும் கிடைக்கும்.

இனிமேல் ஜென் என்றால் என்ன என்ற மண்டைக் குடைச்சலில் இருந்து விடுபட்டு, இந்த கதைகளில் கவனம் செலுத்தி, அதன் மூலம் சிந்திப்பது என்ற ஒரு வழக்கத்தை மேற்கொண்டு, அளவில்லாத அறிவை அடைந்து, அமைதியான, வெற்றிகரமான வாழ்வை அடையலாமே !

கடைசியாக, வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள். கீழே வரும் கதைகள், தன்னுள்ளே தாங்கிவரும் கருத்துகளை மறக்காமல் மனதில் தேக்கி வைத்திடுங்கள். அவற்றை அன்றாட வாழ்வில் இணையுங்கள். அப்படிச் செய்தால் நமது வாழ்வில் துயரங்கள் துரத்தாது. நாம் வாழும் சுற்றத்தில் நட்பும் நல்லுறவும் சேர வளமாக வாழ்வோம் என்பதில் சந்தேகமில்லை.

**கதை** 01.

## விவேகம் உள்ள ஒரு விவசாயி



வள்ளுவர் என்ன சொன்னார்? விவசாயியை, அதாவது, உழுதுண்டு வாழ்பவரையே வாழ்பவராகக் கொள்ள வேண்டும். மற்றவர் எல்லோருமே இவர்கள் பின்னால், அதுவும் கை கட்டி (மரியாதையாக) சென்றிட வேண்டும் என்றாரா இல்லையா?

ஆகவே இந்தப் புத்தகத்தில் ஒரு விவசாயியை முதல் கதாநாயகனாக அறிமுகப்படுத்துவோம்.

உலகின் எந்த மூலையில் சென்றாலும் ஒரு அலுவலகத்தையோ அல்லது சமுதாயத்தையோ எடுத்துக் கொண்டால் அதில் கெட்டவர்கள் பொல்லாதவர்கள், அயோக்கியர்கள் என்று ஒரு சிலரை தனியாக அடையாளம் தெரியும். அதே போல மிக மிக நல்லவர்கள் என்ற வகை மக்கள் குறைந்த அளவில் காணப்படுவார்கள்.

நமது கதாநாயகன் அப்படிப்பட்ட நல்ல வகை மனிதரில் ஒருவர். நல்லவருக்கு அடையாளம் என்னவாயிருக்கும்? அவர்களை விடாது தொடரும் இரண்டு அயிட்டங்கள். முதலில் எளிமை. அதன் பின்னால் தொடர்வது வறுமை.

நல்ல உள்ளம் கொண்ட இந்த விவசாயிக்கு இந்த உலகிலே உள்ளது. மனைவியைத் தவிர, சிறிய அளவிலான விவசாய நிலம், ஒரே ஒரு மகன், ஒரே ஒரு குதிரை ஆகியவை மட்டுமே. தம்மை அடுத்தவருக்கு தம்மால் முடிந்த உதவிகளைச் செய்வார். மற்றபடி எந்த வம்புக்கும் போகமாட்டார். கிராமமே, அவரைப் புகழ்ந்தது. இப்படியாகவே வருடங்கள் ஓடின.

ஒரு நாள், அவருடைய குதிரையும் ஓடிவிட்டது.

மனிதனுடன், நிலத்திலும் மற்றும் மனித வாழ்க்கையில் பல்வேறு பரிமாணங்களில (நம்ம ஊரில் மாடுகளை போல வேறு நாடுகளில்) குதிரைகள், உழைக்கின்றன.

கொடுப்பதை (கிடைப்பதை) உண்டு இயன்ற வரை உழைத்து, கிழடு தட்டியதும் கசாப்புகாரன் கடையில் கண்டதுண்டமாக மாறி, பலருக்கும் பசியைப் போக்கும், இந்த வாயில்லாப் பிராணி வகையில் ஒன்றே ஒன்று நமது கதாநாயகனுக்கு சொந்தமாக உண்டு.

அந்த ஒன்றும் இல்லை என்றால் அடுப்பில் பூனை குடியேறும் அவலமான நிலை.

கிட்டத்தட்ட முதுமையை எட்டிய நம் கதாநாயகன் வீட்டு அடுப்பில், திடீரென்று ஒரு நாள் ஒரு பூனை குடியேறப் பார்த்தது. அதாவது, குதிரை ஓடிப்போய் விட்டது.

குதிரை உழைத்துக் களைத்ததோ, இல்லை அதற்கு விடுதலை தாகம் எடுத்ததோ என்று திட்டவட்டமாக தெரியவில்லை. ஓடிப் போனது மட்டும் தான் எல்லாருக்கும் தெரிந்தது. குதிரை ஓடிய வேகத்தை விட, அதிக வேகத்தில், அந்தச் செய்தி கிராம மக்களிடையே பரவியது.

கிராமங்களில் காணும் ஒரு நல்ல பழக்க-வழக்கம் என்னவென்றால், மக்கள் நரகங்களில், மன்னிக்கவும், நகரங்களில் வாழும் மக்களைப் போல இல்லாமல், அடுத்து வாழும் மக்களின் சுக-துக்கங்களில் முழுமனதுடன் பங்கெடுப்பார்கள்.

அண்டை வீட்டுக்காரரான நம் கதாநாயகனின் குதிரை காணாமல் போன செய்தி கேட்டு கிராமத்தார் வருத்தத்துடன் கூடினார்கள்.

முதியவர் ஒருவர் முன்வந்து, நமது கதாநாயகனை அணுகி, நண்பரே, கடவுள் உங்கள் மீது, ஏன் கோபம் கொண்டாரோ தெரியவில்லை.

இல்லாமையின் எல்லையில் அல்லாடும் உங்களை கடவுள் ஏன் சோதிக்கின்றாரோ? கவலை வேண்டாம். எங்களாலான உதவியும் ஒத்துழைப்பும் எப்போதும் உங்களுக்கும் உண்டு என்று சொன்னார். அதைக் கேட்ட விவசாயியோ, பதிலாகச் சொன்னார்: ‘அதனால் என்ன பார்க்கலாம்’.

மிகப் பெரிய இழப்பிலும், கலங்காத உள்ளத்துடன், தலை நிமர்ந்து நிற்கும் நண்பனைப் புரிந்து கொள்ள இயலாமல் வியந்தனர் பலர்.

சில நாட்கள் நகர்ந்தன. கிராமத்தில் மீண்டும் பரபரப்பான செய்தி ஒன்று பரவியது, ‘ஓடிப் போன குதிரை திரும்பி வந்தது‘. அது மட்டுமில்லை, ‘ஓடிப்போன குதிரை தன்னுடன், காட்டுக் குதிரைகள் நான்கையும் உடன் அழைத்து வந்துள்ளது‘.

(காட்டுக்குப் போன கிராமத்துக் குதிரை, காட்டுக்குதிரைக்கு என்ன சொல்லியிருந்தால் அந்த பரிதாபத்திற்குரிய குதிரைகள் காட்டை விட்டு விட்டு கிராமத்திற்கு வந்திருக்கும்?

அழகான, அமைதியான, மாசற்ற சூழ்நிலைகள் கொண்ட கிராமங்களை விட்டு நெரிசல், சுகாதாரம் இல்லாத குடியிருப்புகளும் கொண்ட நகரங்களுக்கு ஓடி வருகிறோமே. அது போலத்தானே இதுவும்!!!)

வழக்கம் போலவே, நல்லதையும் பொல்லாததையும் ஒன்று போலவே மற்றவருடன் பகிர்ந்து கொள்ளும் நேசமுள்ள, கிராம மக்கள் நம் கதாநாயகனுக்கு வாழ்த்து தெரிவிக்கக் கூடினர்.

ஓடிப்போன குதிரை, திரும்பி வந்தது மட்டுமல்லாமல், இலவச இணைப்பாக உடன் வந்த நான்கு காட்டுக் குதிரைகள் கடவுளின் கருணையினால் வந்த ஒரு பெரும் செல்வம் அல்லவோ' என்று மனமாற வாழ்த்தினார்கள், கிராமத்து நன்மக்கள்.

அதிகக் குதிரைகளின் பலத்தினால் விரைவில் மிகப் பெரிய விவசாயியாக வளர்ந்து பின்னர் பெறும் செல்வந்தர்களாகவும் நண்பர் மாறப் போவது உறுதியென உறுதி கூறினார்கள் நண்பர்கள். வாழ்த்தி விடை பெற்ற கிராம மக்களுக்கு, நாயகன் சொன்னதென்னவோ,

'அதனால் என்ன, பார்க்கலாம்'.

எதிர்பாராது வந்த செல்வத்திலும் நிலை தடுமாறாத மனிதனை வியந்து, நகர்ந்தது அந்த நல்லவர் கூட்டம்.

நாட்களும் நகர்ந்தன. விவசாயியின் வாலிப மகன் ஒருவன், ஓடிப்போன குதிரையுடன் இலவச இணைப்பாய் வந்த காட்டுக் குதிரை ஒன்றை பழக்க முயற்ச்சித்தான்.

குதிரையின் மீது, அதன் விருப்பம் இல்லாமல் ஏற, மனித வாசனையைத் துளியும் அறிந்திடாத அந்தக் காட்டுக் குதிரை

பயந்து ஓட்டமெடுத்தது. வேகத்திற்கு ஈடுகொடுக்க இயலாத நிலையில் விவசாயியின் மகன் கீழே விழுந்தான். அவன் காலும் ஒடிந்தது.

கீழே விழுந்த விவசாயியின் மகனின் கால் ஒடிந்த செய்தி, மீண்டும் ஒரு காட்டுத்தீயைப் போல, ஊரெல்லாம் பரவிட்டது. மீண்டும் அண்டை அயலார் கூடினார்கள்.

இச்செய்தி கேட்டு தங்கள் வருத்தத்தை தெரிவித்த நண்பர்களுக்கு கிடைத்த பதில் என்னவோ வழக்கம் போல:“

‘அதனால் என்ன, பார்க்கலாம்’.

நகரமுடியாத நிலையில் உள்ள மகனுடன் விவசாயி வாழ்ந்திட, நாட்கள் மட்டும் விரைவில் நகருகிறது. ஒரு நாள் திடீரென கிராமமே அதிர்ந்தது. காரணம் அரசாங்க அலுவலர் பலர் பட்டாளத்திற்கு ஆள் சேர்க்க இளைஞர்களைத் தேடி,அக்கிராமத்திற்கு வந்துள்ளதே.

வாலிபர் பலர், போருக்குப் பின் திரும்பி வருவேனோ, என்று கேள்விகள் தலையில் சுமந்து, கனத்த இதயத்துடன் அரசாங்க அலுவலருடன் சென்றனர். காலொடிந்த, விவசாயின் மகள் மட்டும் சுமையற்று சுகமாக கிராமத்தில் தங்கினான். கால் இல்லாதவருக்கு பட்டாளத்தில் என்ன வேலை?

இது கண்ட கிராம நன்மக்கள் நண்பனுக்கு நல்வாழ்த்து கூற, நண்பன் பதில் சொன்னான் எப்போதும் போலவே,

“அதனால் என்ன, பார்க்கலாம்”.

பின் குறிப்பு :

## Thank You for previewing this eBook

You can read the full version of this eBook in different formats:

- HTML (Free /Available to everyone)
- PDF / TXT (Available to V.I.P. members. Free Standard members can access up to 5 PDF/TXT eBooks per month each month)
- Epub & Mobipocket (Exclusive to V.I.P. members)

To download this full book, simply select the format you desire below